Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 05 | [18-05-93] | செவ்வாய்க்கிழமை | ஓசை 89

## மனித இருதயத்தில் பொருத்தப்பட்ட பன்றியின் இருதய வால்வுகள்

(சென்னை)

மனித இருதயத்திலுள்ள பலவீனமான வால்வுகளுக்குப் பதிலாகப் பொருத்தக் கூடிய பன்றி இதய வால்வுகளை தமிழ்நாடு விலங்கியல் மற்றும் கால்நடைப் பல்கலைக் கழகம் வெற்றிகரமாக தயாரித்துள்ளது. மனித இருதய வால்வுகளுக்குப் பதிலாக பயன்படக் கூடிய பன்றி இருதய வால்வுகளை சேகரித்து பதப்படுத்தி சேர்த்து வைக்கக்கூடிய ஒரு திட்டத்தை இப் பல்கலைக் கழகம் தயாரிக்க இருப்பதாகவும், இதற்காக மாநில அரசிடமிருந்து அறுபது கோடி எதிர்பார்க்கப்படுவதாகவும் அப் பல்கலைக்கழக துணை வேந்தர் ஞானப் பிரகாசம் கூறியுள்ளார். தற்போது பன்றிஇதய வால்வுகள் பெருமளவு பொருட் செலவில் இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# மாகாணசபை தேர்தலில் கடும்போட்டி; முடிவுகள் எதிர்வு கூற முடியாதநிலை

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை புதன்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 4.00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## தென் தமிழீழ மக்களின் 'தலைநகர்' சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழ இடம்பெயர்ந்த மக்களால் 'தலைநகர்' எனும்கையெழுத்துச் சஞ்சிகை ஒன்று கடந்த 16-ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

தும்பளையில் அமைக்கப்பட்டுள்ள பூபதி-மணாளன் தயான் குடியிருப்பு மக்களால் வெளியிடப்பட்ட இக்கையெழுத்துச்சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் சமூக,பொருளாதார வளர்ச்சித் திட்டப்பொறுப்பாளர் திரு. ரவி, திரு. பிரிதுகாந் மற்றும் வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சஞ்சிகையில் மாவீரர் வணக்கத்துடன் இம்மக்கள் இடம்பெயர்ந்துவந்த நிலையில் பட்ட துயரங்கள் நடந்து வந்த பாதையில் என்ற கட்டுரையில் காட்டப்பட்டுள்ளதுடன் கவிதைகள், சிறுகதை, மாவீரர் வரலாறு உட்பட பல சிறப்புக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

மேலும் சமூக, பொருளாதார வளர்ச்சித் திட்டம் ஒரு பார்வை, பண்டைய தமிழ்க் கண்டமும் அது குறுகி அழிந்த வரலாறும் இன்றைய தமிழரின் நிலையும், இலங்கை தமிழீழமா? என்ற ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## முழ்முனைப் போட்டி தீவிரம்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் கடும் போட்டி நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்பவற்றுக்கிடையில் இடம்பெறும் இக் கடும்போட்டியினால் வாக்குகள் எண்ணி முடியும் வரை தேர்தல்முடிவுகள் எவ்வாறு அமையும் என கூறமுடியாது உள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய வாக்களிப்பு மாலை 4மணிவரையும் இடம் பெற்றது. கடும்மழை காரணமாக வாக்களிப்பு மந்தமாக இருந்ததெனவும், வாக்குகள் எண்ணும் வேலை இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்படுகிறது முதலில் தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டன. மாவட்ட ரீதியாக இவற்றின் முடிவுகள் அறிவிக்கப்படுமெனத் தேர்தல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உள பாதிப்புற்ற மக்களுக்கு உதவிகள் அவசியம்

-டாக்டர் ஹெரெல்ட் றெப்பெயஸ்கோ

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டு உளவளத் தாக்கங்களுக்கு உட்பட்டு குழப்பமான நிலையில் உள்ளவர்களில் காணப்படும் அறிகுறிகள் கஷ்டமானதாக உள்ளன. அசௌகரியான சூழலில் வாழ்வதால் மக்களின் உள்ளம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் தொழில் சார்ந்த உதவிகளுடன் சமூக-மனோவியல் அடிப்படையிலும் உதவிகள் அவசியமாகின்றன. இதற்காகப் போறாட் ஒரு செயற் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது என்றார் டாக்டர் ஹெரெல்ட் றெப்பெயஸ்கோ.

நோர்வேயில் இருந்து குறுகிய கால விஜயமாக யாழ்ப்பாணம் வந்து போரினால் பாதிக்கப்பட்டு உள அதிர்ச்சிக்கு உட்பட்ட சிறார்களைப் பற்றி ஆய்வு செய்து கொண்டு இருக்கும் நோர்வே துரொண்ட்ஹைவ மனோவியல் மருத்துவமனை பிரதம உளவள மருத்துவ நிபுணர் டாக்டர் ஹெரல்ட் றெப்பெயஸ்கோ நேற்று மாலை பத்திரிகையாளர் சந்திப்பில் இவ்வாறு கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பல அனர்த்தங்களுக்கு உள்ளாகி உள்ளார்கள்-குடும்பங்கள் உழைப்பாளிகளை இழந்துள்ளன. மேலும் பலர் இடம்பெயர்ந்துள்ளார்கள். பல தரத்து மக்களும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். போர் தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வாக்களிப்பில் முறைகேடு என முறைப்பாடு

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் தேர்தல் தொடர்பாக பார்வையிடவந்த குழுவிடம் முறையிட்டு இருப்பதாகவும் எதிர்க் கட்சிகளின் பேச்சாளர் விக்கிரமவீரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தொகுதியில் சாப்பாட்டுப் பார்சல், இருபது ரூபா பணம், ஒரு ...டது.

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த பலர் எதிர்க்கட்சி ஆதரவாளர்களை பலவந்தம் செய்தும், மிரட்டியும் இருப்பதாகவும் இதனால் வாக்காளரின் சுதந்திரம் இத்தேர்தலில் பேணமுடியாமல் போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரண்டு வலயங்களாக இலங்கை பிரிகிறது

கொழும்பு நாளிதழ் செய்தி

(கொழும்பு)

இலங்கை இரு வலயங்களாகப் போய்க்கொண்டிருப்பதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இரு வலயங்களாகப் பிரிந்துள்ள வட கிழக்கும், தெற்கும் இருவேறு பக்கங்களில் போய்க்கொண்டிருக்கிறது. வடக்குக் கிழக்குப் பகுதி போர்வலயமாகவும் தெற்குப்பகுதி அபிவிருத்தி வலயமாகவும் காணப்படுகிறது என அந்நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்களிப்பு நிலையத்தில் 5 உத்தியோகத்தர் காயம்

[கொழும்பு]

பாணந்துறையில் நேற்று வீசிய பலத்த காற்றினால் வாக்களிப்பு நிலையக் கூரை ... தனர்

மேலும் கட்டுநாயக்க முதல் மாத்தறை வரை பலத்தமழை பெய்துள்ளது. இதனால் பல

## வள்ளத்தில் சென்று காலியில் வாக்களிப்பு

நேற்று தென்னிலங்கையில் சில பகுதிகளில் கடுமையான மழைபெய்து பெருவெள்ளம் ஏற்பட்டபோதிலும் வாக்காளர்கள் வாக்குச் சாவடிகள் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

காலியில் சில இடங்களில் வாக்காளர்களை ஏற்றிச் செல்ல வள்ளங்கள் பயன்பட்டன. நாகொட, ஹினிதும, பத்தேகம ஆகிய பகுதிகளில் வெள்ளஆபத்து நிலவியது. கரையோரப்பகுதி வாக்காளர்கள் அங்கு பலத்தமழைபெய்த போதிலும் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதே போன்று அம்பாந்தோட்டையிலும் கடும் மழை பெய்தது.

## 'குமண' வியாழன் ...

வளர்ச்சித் திட்டப்பொறுப்பாளர் திரு. ரவி, திரு. பிரிதுகாந் மற்றும் வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பார்வை, பண்டைய தமிழக கண்டமும் அது குறுகி அழிந்த வரலாறும் இன்றைய தமிழரின் நிலையும், இலங்கை தமிழீழமா? என்ற ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## இரண்டு வலயங்களாக இலங்கை பிரிகிறது

### கொழும்பு நாளிதழ் செய்தி

(கொழும்பு)

இலங்கை இரு வலயங்களாகப் போய்க்கொண்டிருப்பதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இரு வலயங்களாகப் பிரிந்துள்ள வட கிழக்கும், தெற்கும் இருவேறு பக்கங்களில் போய்க்கொண்டிருக்கிறது. வடக்குக் கிழக்குப் பகுதி போர்வலயமாகவும் தெற்குப் பகுதி அபிவிருத்தி வலயமாகவும் காணப்படுகிறது என அந்நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'குமண' வியாழன் பருத்தித்துறை வரும்

(வடமராட்சி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து மீண்டும் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் நிற்கும் அரச உத்தியோகத்தர்கள் இன்று பிற்பகல் 'குமண' கப்பல் மூலம் திருக்கோணமலையை நோக்கிச் செல்லவுள்ளனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ் நோக்கிப் புறப்பட்டு 'நகர' கப்பல் மூலம் வரும் 7 அரச உத்தியோகத்தர்கள் இன்று காலை 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவர்.

திருக்கோணமலைக்கு அரச உத்தியோகத்தர்களை ஏற்றிச் செல்லும் 'குமண' வியாழக்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும்.

(யோ)

## கல்விப்பணிப்பாளராக சுந்தரலிங்கம் நீடிப்பு

வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக இ. சுந்தரலிங்கம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே தனது சேவைக் காலத்தை மேலும் ஒருவருடகாலத்திற்குநீடித்துத் தரும்படி கல்வியமைச்சைக் கோரியிருந்தார். இதனைத் தொடர்ந்தே மேற்படி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதிக் கடிதம் நேற்று கல்வி அமைச்சின் செயலாளர் அலஸ் அவர்களினால் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினூடாக இ. சுந்தரலிங்கம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்படி இ. சுந்தரலிங்கம் தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

[பா]

## க.பொ.த. (சா) பரீட்சை மீள் பரிசீலனை

க.பொ.த.(சா/தர)பரீட்சை டிசம்பர் 1992இற்கான பெறுபேறுகள் மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பமுடிவுத் திகதி கடந்த மாதம் 30ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருந்தபோதும் இற்றைவரை எந்த ஒரு விண்ணப்பப்படிவங்களும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறவில்லை என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

மேலும் மேற்படி விண்ணப்பங்களை உடன் அனுப்பி வைக்கும்படி யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்தைஅவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பரீட்சைத் திணைக்கள அலுவலர் இங்கிருந்து இம்மாதம் 21ஆம் திகதி கொழும்புசெல்ல இருப்பதால் பரிசீலனைக்கு விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் அவ் விண்ணப்பத்தின் பிரதியினையும் (கட்டணமின்றி) இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாதோரும் உரிய கட்டணததுடனும் உரிய முறையில் விண்ணபபங்களை இம்மாதம் 20திகதிக்கு முன்னர் யாழ். கல்வித்திணைக்களத்தில் ஒப்படைக்கவும்.

அஞ்சலில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் இம் மாதம் 20ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டது.

(பா)

# தேர்தல் வாக்களிப்பில் முறைகேடு என முறைப்பாடு

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் தேர்தல் தொடர்பாக பார்வையிடவந்த குழுவிடம் முறையிட்டு இருப்பதாகவும் எதிர்க் கட்சிகளின் பேச்சாளர் விக்கிரமவீரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தொகுதியில் சாப்பாட்டுப் பார்சல், இருபது ரூபா பணம், ஒரு 'கிளாஸ்'' சாராயம் போன்றவற்றிற்கு வாக்குகள் ஐக்கிய தேசிய கட்சியின் மூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த பலர் எதிர்க்கட்சி ஆதரவாளர்களை பலவந்தம் செய்தும், மிரட்டியும் இருப்பதாகவும் இதனால் வாக்காளரின் சுதந்திரம் இத்தேர்தலில் பேணமுடியாமல் போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாக்களிப்பு நிலையத்தில் 5 உத்தியோகத்தர் காயம்

[கொழும்பு]

பாணந்துறையில் நேற்று வீசிய பலத்த காற்றினால் வாக்களிப்பு நிலையக் கூரை சரிந்து விழுந்ததில் ஐந்து தேர்தல் உத்தியோகத்தர்களும் வேறு ஒருவரும் காயமடைந்தனர்

மேலும் கட்டுநாயக்க முதல் மாத்தறை வரை பலத்தமழை பெய்துள்ளது. இதனால் பல பாதைகள் பாவிக்க முடியாத நிலையை அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அபேட்சகரை மிரட்டியதாக அமைச்சர் மீது புகார்

(கொழும்பு)

நடைபெற்ற மாகாணசபை தேர்தலின்போது நேற்றுமுன்தினம் வரையும் சுமார் 550 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸில் முறைபாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அபேட்சகரையும், ஆதரவாளர்களையும் கொலை செய்ய முயற்சிசெய்தல், உடைமைக்கு தீயிடல், மிரட்டல் நடவடிக்கை தொடர்பாகஇவ்வாறு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பெஸ்டெஸ்பெரேரா அமைச்சர் விஜேபால மென்டிஸ் ஆகியோர் தம்மிடம் உள்ள ஆயுதங்களினால் எதிர்க்கட்சி அபேட்சகரையும் ஆதரவாளர்களையும் மிரட்டியுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவின் கைக்கூலிகளாக பொலிசார் செயற்பாடு

### - காமினி முறையீடு

தேர்தற் கடமையில் ஈடுபட்ட பொலிசார் ஐக்கிய தேசிய கட்சியின் கைக்கூலிகளாக செயற்பட்டுள்ளனர் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான காமினி திஸாநாயக்கா தெரிவித்தார்.

இத் தேர்தல் முறைகேடுகள் பொலிசாரின் உதவியுடனேயே நடைபெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என அவர் தெரிவித்தார். கடுகண்ணாவ, குருநாகல பகுதிகளில் தமது கட்சியின் வாகனங்களைப் பொலிசார் பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளதாகவும், இதனால் தமது கட்சியின் தேர்தல் வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் துணிகர தாக்குதல் படையினருக்கு குழப்பம்

## மன்னார் மாவட்டத் தளபதி கதிர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சென்று அண்மைக் காலங்களில் மேற்கொண்ட துணிகரத் தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு குழப்பநிலையையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு மன்னார்மாவட்ட தளபதி திரு. கதிர் புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இப்பேட்டியில் மன்னார் மாவட்ட இராணுவத்திற்கு எதிராக புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்த தளபதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

லும் உதவிகள் அவசியமாகின்றன. இதற்காகப் போறாட் ஒரு செயற் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது என்றார் டாக்டர் ஹெரெல்ட் றெப்பெயஸ்கோ.

நோர்வேயில் இருந்து குறுகிய கால விஜயமாக யாழ்ப்பாணம் வந்து போரினால் மக்கள் பல அனர்த்தங்களுக்கு உள்ளாகி உள்ளார்கள். குடும்பங்கள் உழைப்பாளிகளை இழந்துள்ளன. மேலும் பலர் இடம்பெயர்ந்துள்ளார்கள். பல தரத்து மக்களும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். போர் தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வள்ளத்தில் சென்று காலியில் வாக்களிப்பு

நேற்று தென்னிலங்கையில் சில பகுதிகளில் கடுமையான மழைபெய்து பெருவெள்ளம் ஏற்பட்டபோதிலும் வாக்காளர்கள் வாக்குச் சாவடிகள் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

காலியில் சில இடங்களில் வாக்காளர்களை ஏற்றிச் செல்ல வள்ளங்கள் பயன்பட்டன. நாகொட, ஹினுதும, பத்தேகம ஆகிய பகுதிகளில் வெள்ளஆபத்து நிலவியது. கரையோரப்பகுதி வாக்காளர்கள் அங்கு பலத்தமழைபெய்தபோதிலும் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதே போன்று அம்பாந்தோட்டையிலும் கடும் மழை பெய்தது.

## கடும் மழையினால் வாக்குப் பதிவு மந்தம்

[கொழும்பு]

பலத்த பாதுகாப்பிற்கும் பெரும் மழைக்கும் இடையே சிறிலங்காவில் 7 மாகாண சபைகளுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது.

ஓயாது பெய்த கடும்மழை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால விதிகள் நள்ளிரவுமுதல் அமுல்

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தளர்த்தப்பட்ட அவசரகால விதிகள் மீண்டும் கடந்த நள்ளிரவு முதல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இதன்படி ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் அவசரகால விதிகள் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன.

தேசத்துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அவற்றுக்குத் தூண்டுதல் அளித்தல் பற்றிய அவசரகால சட்ட விதிகளில் அரசாங்கத்தை சட்டவிரோதமான வழிகள்மூலம் கவிழ்க்கும் நோக்குடன் சுலோகங்களை காட்சிககு வைப்பது, துண்டுப் பிரசுரங்களைவிநியோகிப்பது, வதந்திகள் மற்றும் தவறான அறிக்கைகளைப் பரப்புதல் போன்றவற்றை கட்டுப்படுத்தும் சட்ட விதிகளும் மீண்டும் அமுல் செய்யப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய எந்தவிதமான கிளர்ச்சியைத் தூண்டும் பிரசுரங்களையும் வைத்திருப்பதை தடைசெய்யும் சட்ட விதிகளும் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

பொலிசார் அல்லது ஆயுதப் படையைச் சேர்ந்தவர்கள் தேர்தல் நடத்துவது பிடிவிறாந்து இல்லாது கைது செய்து தடுத்து வைப்பது ஆகியன சம்பந்தமான விதிகளும் அமுலுக்கு வந்துள்ளன.

# மாகாணசபை தேர்தல் முடிவு-1993

நேற்று நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் மாவட்ட ரீதியாக நள்ளிரவுக்குப் பின்னர் வெளிவந்துள்ளன. முதலாவதாக பொலநறுவ மாவட்டத்தின் முடிவு வெளியாகியது. இதனைத் தொடர்ந்து மேலும் சில வெளிவந்துள்ளன.

| மாவட்டம் | ஐ.தே.க | ம.ஐ.மு | ஐ.ஐ.தே.மு |
|---|---|---|---|
| பொலநறுவை | 527 | 463 | 326 |
| காலி | 3403 | 3605 | 1098 |
| கண்டி | 3529 | 3384 | 2868 |

## வரி விளம்பரம்

### கசற்றேடியோக்களா! கடிகாரங்களா!!

உங்கள் கடிகாரங்களையும், றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள்: டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-6608)

### கோழித்தீன் வெற்றுப் பக்கற்

கோழித்தீன் வெற்றுப் பக்கற் தேவை. மில்க்வைற். (சி-6638)

### தவறிவிட்டது

கடந்த 28-4-93 அன்று இருபாலைச் சந்திக்கும் அச்சுவேலிக்கும் இடையில், எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் சபா ரேட் சென்ரர், இருபாலைச் சந்தி என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (4898)

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

### தவறிவிட்டது

நாகலிங்கம் சின்னம்மா அல்லது தங்கம்மா ஆகிய எனது அடையாள அட்டை (356112512V) பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (4906)

### தேவை

தையலில் தேர்ச்சி பெற்ற பெண் தொழிலாளர் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயசங்கர் தச்சுத் தொழிற்சாலை, 70, பலாலி வீதி, கந்தர்மடம்

## இறந்தவருக்கு அளித்த வாக்கு செல்லுபடியற்றது

[கொழும்பு]

காலம்சென்ற வேட்பாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட விருப்புரிமை வாக்குகள் சட்டத்தின் அடிப்படையில் பெறுமதி அற்றவையாக கருதப்பட்ட போதிலும் வாக்குகள் கணக்கெடுக்கப்படுவதை சரிவர வைத்திருக்கும் விதத்தில் அவையும் கணக்கெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா அறிவித்துள்ளார். மாகாண சபை சட்டத்தின் மூலம் காலம் சென்றவேட்பாளரின் பெயர் வேட்பாளர் நியமனப் பத்திரத்திலிருந்து விலக்கப்படும். எனவே அவருக்கென அளிக்கப்பட்ட விருப்புரிமை வாக்குகள் பெறுமதியற்றதாக கருதப்படும்.

## ஓராண்டு நினைவலைகள்

| வீரப் பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 26 – 08 – 1967 |  | 30 – 05 – 1992 |

### கப்டன் அன்பு மாஸ்டர் (குட்டி)

[ஐயம்பிள்ளை (P M.) சிவகுமார்]

திதி: 19-05-1993

சிவகுமாரன் எனும் - இயற்<br>
பெயர் கொண்டவனே!<br>
எங்கள் அன்பு மகனே!<br>
மணலாற்றின் மண்மீட்புப் போரிலே<br>
ஆகுதி ஆனாயே<br>
நீர் எம்மைப் பிரிந்து<br>
ஆண்டு ஒன்று ஆகிலும்<br>
ஆறாத விழிகளாய் - தினம்<br>
நினைத்து வாடுகின்றோம்.

நாளை 19-05-1993 (புதன் கிழமை) எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆண்டுத்திதி மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவருடன் மணலாற்றில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

கந்தரோடை வீதி,<br>
மாகியப்பிட்டி,<br>
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(4897)

உ

## முதலாவது பிறந்த தினம்
## செல்வன் நே. கவிப்பிரியன்
## 18-05-1993

கரவெட்டி, கோவிற்சந்தை, கலைச்செல்வி வீதியைச் சேர்ந்த திரு. திருமதி நேசராசா (சோதிடர்) மேரி பெர்ணடேற் தம்பதிகளின் புதல்வன் செல்வன் ''கவிப்பிரியன்'' தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

கவிப்பிரியன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ. அப்பா, அம்மா, அக்காமார், உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் வாழ்த்துகின்றார்கள்.

(சி-6639)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்<br>
09. 05. 1966

ஆண்டவன் அடியில்<br>
04. 04. 1993

### திருமதி ராஜ்குமார் ஸ்ரீஸ்டெலாதேவி [ராசாத்தி]

(முன்னாள் செரன்டிப் ரேட் சென்ரர் ஊழியர்)<br>
ஆஸ்பத்திரி வீதி,

யாழ் அரியாலையில் பிறந்தாயே!<br>
இந்தியா தனிலே இறப்பதற்கா?<br>
வாழ வேண்டிய வயதினிலே<br>
வன் விதிக்காளாய் மடிந்தாயே.<br>
எண்ணெய் அடுப்பின் கெடுபிடியால்<br>
எரிந்தே மடிந்தாய் ராசாத்தி!<br>
நாளும் பொழுதும் பெற்றோர்கள்<br>
வாடியே நிற்கும் துணைவன்<br>
நயமார் உன்றன் பத்திரர்கள்<br>
அன்புயர் சோதர சோதரிகள்<br>
ஆறாத் துயரில் மூழ்கி!<br>
கடவுளைத் தொழுகின்றோம் - நின் ஆத்மாசாந்திக்கே!

உன் பிரிவால் வாடும்:-<br>
அன்புக் கணவன்,<br>
பிள்ளைகள், பெற்றோர்,<br>
சகோதர, சகோதரிகள்.

418, நாவலர் வீதி,<br>
அரியாலை.

(4896)

அரசினர் பொது வைத்தியசாலை,<br>
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

இவ் வைத்தியசாலையில் அமைய/ஆங்கில சுருக்கெழுத்தாளர் [CASUAL STENOGRAPHER] பதவி ஒன்றுக்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க,பொ.த (சா/த) பரீட்சையில் அல்லது சி.பொ.த பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில், தமிழ்மொழி, ஆங்கிலமொழி, கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

   அல்லது

   க.பொ.த (சா/த) சி.பொ.த பரீட்சையில் சுருக்கெழுத்து பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 31 05 93இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 31. 05. 93 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய சம்பள விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்<br>
வைத்தியகலாநிதி செல்வி)<br>
என். கனகரட்ணம்

(சி 6640)

## இறுதி அஞ்சலி

செல்வன்

### குலசிங்கம் சிவகுமார் [அமைச்சர்]

[கரவெட்டி]

[இறுதியாண்டு மாணவன் பௌதிக விஞ்ஞானப்பிரிவு, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைககழகம்]

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10. 06. 1967 | 14. 05. 1993 |

தேசத்தில் உழைக்கவென - பல<br>
நேசங்கள் பிரிய இன்னும் - சில<br>
மாசங்கள் கழிய முன்னே - நீர்<br>
வேசத்தை கலைத்ததேனோ<br>
வெறும் பாசம் தான் இவையென்றெண்ணியோ?

மறைந்த எம் இனிய நண்பனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அத்தனை நெஞ்சங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3-ம் வருட பௌதிக<br>
விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள்<br>
யாழ். பல்கலைக்கழகம்.

(4903)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-05-18

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். வல்வெட்டித்துறையில் முற்றுகையினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ணம். (4871)

## தவறிவிட்டது

நாகலிங்கம் சின்னம்மா அல்லது தங்கம்மா ஆகிய எனது அடையாள அட்டை (356112512V) பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(4906)

## தேவை

தையலில் தேர்ச்சி பெற்ற பெண் தொழிலாளர் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயசங்கர் தச்சுத் தெழிற்சாலை, 70, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4907)

## தமிழ் மூலம் தபால் பயிற்சி

[மட்டக்களப்பு]

தபால் துறையில் தமிழ் மொழி மூலம் சேவையாற்ற உள்ள அஞ்சல் அதிபர்களுக்கான சமிழ் மொழி அஞ்சல் பயிற்சிநிலையம் ஒன்று மட்டக்களப்பில் திறக்கப்படவிருக்கிறது.

வெள்ளவத்தையில் உள்ள அஞ்சல் அதிபர்கள் பயிற்சி நிலையத்தில் தற்போது சுமார் 80 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது

## பாலர் பாடசாலை திறப்பு

புலோலி கிழக்கு உத்திராவத்தை அன்புமலர் பாலர் பாடசாலைத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

திரு. வ. ரவிதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் புலோலி வடகிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. இ. புலேந்திரனும், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் திரு. இரா. சிவச்செல்வமும் மங்கள விளக்கேற்ற ஆசிரியர் திரு. எம் லோகசிங்கம் பாடசாலையைத் திறந்து வைத்தார். (30)

## உதைபந்தாட்டம்

மட்டுவில் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட தவிர்த்தல் முறையான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இந்து சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து ஆடிய பண்டிதர் குடியிருப்பு விளையாட்டுக் கழகத்தை 6 — 1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(17)

---

நாளை 19-05-1993 (புதன் கிழமை) எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆண்டுத்திதி மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவருடன் மணலாற்றில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

கந்தரோடை வீதி,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(4897)

---

வாழ வேண்டிய வயதினிலே
வன் விதிக்காளாய் மடிந்தாயே.
எண்ணெய் அடுப்பின் கெடுபிடியால்
எரிந்தே மடிந்தாய் ராசாத்தி!
நாளும் பொழுதும் பெற்றோர்கள்
வாடியே நிற்கும் துணைவன்
நயமார் உன்றன் புத்திரர்கள்
அன்புயர் சோதர சோதரிகள்
ஆறாத் துயரில் மூழ்கி!
கடவுளைத் தொழுகின்றோம் - நின் ஆத்மாசாந்திக்கே!

உன் பிரிவால் வாடும்:-
அன்புக் கணவன்,
பிள்ளைகள், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்.

418, நாவலர் வீதி,
அரியாலை.

(4896)

---

நேசங்கள் பிரிய இன்னும் - சில
மாசங்கள் கழிய முன்னே - நீர்
வேசத்தை கலைத்ததேனோ
வெறும் பாசம் தான் இவையென்றெண்ணியோ?

மறைந்த எம் இனிய நண்பனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அத்தனை நெஞ்சங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3-ம் வருட பௌதிக
விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(4903)

---

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**அமரர் திரு. நா. இராஜநாயகம்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 1922-05-05
மறைவு: 1990 05-18

**அமரர் திருமதி இராசமணி இராஜநாயகம்**
(இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம்: 1918-11-19
மறைவு: 1990-07-12

அன்புடன் எமை அணைத்து ஆசையாய் எமை வளர்த்த
பண்பால் உயர்ந்து விட்ட பாசமிகு மாமா மாமியரே உமைப்
பிரிந்து ஆண்டுகள் மூன்றானாலும் நாம் ஆறுதல் கொள்ளவில்லை
உங்களின் சாந்திக்காக தினம் ஆண்டவனைப் பிரார்த்திக்கும்.

"சந்திரிகை"
சிவகுலவீதி,
உரும்பராய்.

பாசமுள்ள
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(4888)

---

# நினைவு கூருகின்றோம் ... 1993-05-18

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். வல்வெட்டித்துறையில் முற்றுகையினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**செல்வம்** [வேலுப்பிள்ளை அன்னலிங்கம் பகிரதன் - 5-ம் வட்டாரம், மண்டைதீவு - யாழ் ]

1986 ஆம் ஆண்டு ஊர்காவற்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சித்** [ஜெகநாதன் ஜெயராஜ் சோசை - வங்காலை- மன்னார்]

இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். அங்கிள்** [பிரபுதாஸ் பாக்கியநாதன் வில்லியம் ரஞ்சித் - செற்பலி மேற்கு, மிருசுவில் - யாழ்.]

**ரகு** [ — வசீகரன் - சாவகச்சேரி - யாழ்.]

**ஜோதிரவி** [அருமைத்துரை திருமானந்தம் - ஜோதிரவி வீதி, சந்திபுரம், மட்டுவில் வடக்கு சாவகச்சேரி - யாழ்.]

யாழ் வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**தேசிகன்** [சிவசாமி சிவகுமாரன் - 3-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்.]

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**லெப். அருள்** [சபாரத்தினம் சத்தியராஜ் - மூதூர் - திருமலை]

திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நிலாவெளி பிரதேசப் பொறுப்பாளர் -

**கப்டன் கிங்ஸ்லி** [வல்லிபுரம் சிவகுமார் - கலட்டி, கரவெட்டி மேற்கு - யாழ் ]

1989 ஆம் ஆண்டு புத்தூரில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 5 இளைஞர்கள் உட்பட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு யாழ். வல்வெட்டித்துறையில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சாள்ஸ்** [பொன்னுச்சாமி கருணாகரன் - "கமலா வாசம", இன்பருட்டி, பருத்தித்துறை - யாழ்.]

1992ஆம் ஆண்டு முல்லைத்தீவு - வற்றாப்பளை ஆலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஏறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் இளங்கோ / விமல்ராஜ்**
[குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் - கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் - மணலாறு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6637)

நல்லூர் இளை நூலகம்
மாநகர[illegible] மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

அச்சத்தின் அடிப்படையில்பேச்சை நடத்தவும் கூடாது; அதே போன்று பேச்சு நடத்த ஒரு போதும் அஞ்சவும் கூடாது.

ஜோன் எப். கென்னடி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தடங்கல் யாரால்?

இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியான தீர்வு காண்பதற்கு யார் முட்டுக்கட்டையாக உள்ளனர்? எது தடையாகவுள்ளது? ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து சிறிலங்காவின் அறிவிப்புக்களும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் இவ்வாறானதொரு கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

''விடுதலைப் புலிகள் தமது அபிலாசைக்கு நெருக்கமான ஓர் அரசியற் தீர்வை விரும்பினால் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். எமது கதவுகள் என்றுமே திறந்து விடப்பட்டுள்ளன. நாம் பேச்சுவார்த்தைகளை விரும்புகிறோம்.'' இது சிறிலங்கா ஜனாதிபதியின் அறிவிப்பாகும். அவர் புதிதாகப் பதவி ஏற்ற சுமார் இரண்டு வார காலத்திற்குள் விடும் மூன்றாவது அறிவிப்பும் ஆகும்.

இதேவேளை ''தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்ததைக்கு எப்பொழுதும் தயாராகவே உள்ளனர். சிறிலங்கா அரசுடன் நிபந்தனையற்ற பேச்சிற்கு எப்பொழுதுமே தயார். ஆனால், பேச்சுவார்த்தை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், அது வெற்றி பெற வேண்டுமானால், அதற்குரிய உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும்'' என பாரிஸிலுள்ள விடுதலைப் புலிகளைச் சேர்ந்த லோரன்ஸ் திலகர் பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

அதாவது இரு பகுதியினரும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றால் இதற்குத் தடையாக இருப்பதென்ன என்பதே கேள்வியாகும். இந் நிலையில்தான் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கொண்டிருக்கும் நிலைப்பாடும், விதிக்கும் நிபந்தனைகளும் முக்கியம் பெறுகின்றன.

சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் எனக் கோருகின்றது. ஆனால் இது நடைமுறைச் சாத்தியமல்ல. ஏனெனில் தமிழருடன், குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசியே தீர வேண்டும். அப்பொழுதே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணலாம் என்ற நிலையை உருவாக்கியது விடுதலைப்புலிகளிடம் உள்ள ஆயுதங்களே ஆகும். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்

## ரகுநாதனை குடும்பத்தினர் சென்று பார்க்கவில்லை

### பொலிஸ் அதிகாரி மறுப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியை சுட்டுக் கொன்றவராக கருதப்படும் ரகுநாதன் என்பவரை 6 சாட்சிகள் ஏற்கனவே அடையாளம் காட்டியுள்ளதாக குற்ற புலனாய்வு பொலிஸ் பிரிவு உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கொலைக்கு மூன்று நாட்களுக்கு முன் கொலையாளியை பொலிஸார் தேடி வந்ததாக வெளியான தகவல்களை அவர் மறுத்தார். ரகுநாதன் என்பவர் கிருலப்பனையில் பொலிஸ் தடுப்பில் உள்ளபோது அவரின் குடும்பத்தினர் சென்று பார்த்தனர் என்ற செய்தியையும் அந்த அதிகாரி மறுத்தார்.

## பொலிஸ் வாகனங்களில் வாக்குப்பெட்டி செல்லாது

(கொழும்பு)

வாக்குப்பெட்டிகள் பொலிசாரின் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படமாட்டாது. வாக்களிப்பு நிலையங்களுக்கு பொறுப்பானவர்களின் வாகனங்களிலேயே அவை கொண்டு செல்லப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வேட்பாளர்களின் மெய்க் காவலர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

## ஜெனரல் ஆட்டிகல எயர் லங்கா தலைவர்?

(கொழும்பு)

எயர் லங்கா பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இம் மாதம் 24ஆம் திகதி ராஜினாமா செய்கின்றனர். எயர் லங்காவின் புதிய பணிப்பாளராக பிரிட்டனில் உள்ள சிறிலங்கா தூதுவர் ஜெனரல் சேபால ஆட்டிகல நியமனமாகலாம் எனக் கூறப்படுகிறது. ஆட்டிகல தனது பதவியை 25ஆம் திகதி பொறுப்பேற்கலாம்.

ஜெனரல் சேபால ஆட்டிக்கல இவ்வார இறுதியில் கொழும்பு திரும்புகின்றார்.

## சீனி வாங்குவதானால் பூடும் பெறவேண்டும்

### பாவனையாளர் அவதி

(யாழ்ப்பாணம்)

பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் இரண்டு கிலோ சீனியைப் பெறுவதற்கு 200 கிராம் பூடு(உள்ளி) கட்டாயம் வாங்கவேண்டும். இது அளவெட்டிமல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளால் பாவனையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அளவுக்கு அதிகமாக கொள்வனவுசெய்த உள்ளியை விற்கவேண்டும் என்றே பாவனையாளர்களுக்கு இந்த நிபந்தனைக்கமைய பங்கீட்டு அட்டைக்கான சீனியுடன் உள்ளியை விற்கின்றது. இதனால் சீனிவாங்குவதற்கு காசை மாறிக்கொண்டு செல்பவர்கள் உள்ளிக்கு மேலதிகமாக 20 ரூபா கொண்டு செல்லாததால் சீனியை வாங்க முடியாது திணறுகின்றனர். (சி)

## வெளிச்சேவை செய்யாத ஆசிரியர் விபரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களில் இதுவரை யாழ் மாவட்டத்துக்குவெளியேஒருபோதும் கடமையாற்றாமலுள்ள ஆசிரியர்களின் சேவை விபரங்களை 20 05.93க்கு முன்னர் தமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறுஒவ்வொரு கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

இவ் விபரத்தில் தற்போது சேவையாற்றும் பாடசாலை கல்வித்தகைமைமற்றும்சேவை விபரங்களை சரியாக உறுதிப்படுத்தி அனுப்புமாறு இவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

# பிரேமா கொலை விசாரணை விசேட புலனாய்வு பிரிவிடம்

(கொழும்பு)

முன்னாள்ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை குறித்த விசாரணை விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது இரகசிய பொலிஸ் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஸ தலைமையிலான விசேட புலனாய்வுப்பிரிவே இனி விசாரணைகளை கையாளும்.

இதில் சி. ஐ. டி. குற்ற தடுப்பு பணியகம் தேசிய புலனாய்வு பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுக்கு உதவியாக இராணுவ புலனாய்வுப் பிரிவும் செயற்படும் பொலிஸ் மாஅதிபர் ஏர்னஸ்ட் பெரேரா இக்குழுவை நியமித்துள்ளார்.

### விபரங்கள் ஒப்படைக்க பணிப்பு

வீடமைப்பு மானியத்தை வழங்குவதற்குரிய குடும்பங்களை தெரிவுசெய்து அவற்றின் விபரங்களை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தி 25-5-93-க்கு முன்னர் தமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ் மாநகரசபை ஆணையாளரும்,, யாழ் பிரதேச வீடமைப்புக் குழுத் தலைவருமாகிய திரு. வே. பாலசிங்கம் யாழ். மாநகரசபையின்கீழ் இயங்கிவரும் சமூக அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களை கேட்டுள்ளார்.

இவ்வீடமைப்புமானியத்தை வழங்குவதற்குரிய குடும்பங்களை தெரிவு செய்வதற்காக ஏற்கனவே யாழ்மாநகரசபையினால் ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் சமூக அபிவிருத்திக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [17)

### உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் உலர் உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொண்ட தனது பாவனையாளர்களிற்கு சித்திரை மாதத்திற்கான முதல் இருவார உலர் உணவு விநியோகத்தை கடந்த சனிக்கிழமையில் இருந்து மேற் கொண்டு வருகிறது. (88)

### விலை வீழ்ச்சி

தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது கடந்த மாதம் 30 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டதேங்காய் தற்பொழுது 15 ரூபாவுக்கு குறைவடைந்துள்ளது. (88)

## காலியை பயன்படுத்தி பாரிய மீன்பிடி திட்டம்

(கொழும்பு)

அமெரிக்க நிறுவனமான கூட்டிணைக்கப்பட்ட கடலுணவு கோர்ப்பிரேஷன் என்ற நிறுவனம் இலங்கையில் பாரிய ஆழ்கடல் மீன் பிடி திட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

ஆழ்கடலில் பிடிக்கப்படும் மீனை பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய காலித் துறைமுகம் ஆதார துறைமுகமாக பயன்படும். 747ரக விமானத்திற்கு வசதியாக துறைமுகத்திலிருந்து 10 மைல் எல்லைக்குள் விமான நிலையம் ஒன்றையும் இந்தஅமெரிக்க கம்பனி அமைக்கவுள்ளது.

இந்த ஆழ்கடல் மீன் பிடி திட்டத்திற்கு 30 கோடி டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உத்தேச திட்டத்தில் 100 பெரிய மீன்பிடி கலங்களும் 12 சிறிய ரக மீன்பிடி கலங்களும் இரு பார வீச்சு இழுப்பு வலைவீசும் மீன்பிடி கலங்களும் ஒரு துணை கலமும் பயன்படுத்தப்படும்.

பிடிக்கப்படும் மீன் முழுவதும் ஐரோப்பாவிற்கும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் 200 மைல் கடல் எல்லைபரப்பிற்குள் மீன்பிடிக்கப்படமாட்டாது. இலங்கையில் உள்நாட்டுசந்தையில் விற்பனையும் மேற்கொள்ளப்படமாட்டாது.

## கேளிக்கை நிகழ்ச்சிகள் நிறுத்தப்படும் - ஜனாதிபதி

(கொழும்பு)

பொதுமக்களின் பணத்தை வீணாக்கும் கண்காட்சிகள் கொண்டாட்டங்கள், கேளிக்கைகள் இனி நடத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி விஜேதுங்க தெரிவித்துள்ளார். அதேசமயம் அமைச்சரவையில் மாற்றம் ஏதும் உடனடியாக செய்யும் எண்ணம் இல்லை என்றும் அவர் கூறினார்.

## தொலைக்கல்வி பரீட்சை இம்மாத இறுதியில்

(கொழும்பு)

தொலைக்கல்வி பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறும். முதாலவது தொலைக் கல்வி பரீட்சையில் 28 ஆயிரம் மாணவ ஆசிரியர்கள் தோற்றுவர் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறினார்.

வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இப்பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் முதற்பரீட்சை இதுவாகும்.

## ஜிகாத் வைத்த குண்டு செயலிழக்க செய்யப்பட்டது

மட்டக்களப்பு ஆரையம்பதி சந்தைப் பகுதியில் ஜிகாத் பிரிவினரால் கடந்த செவ்வாயன்று வைக்கப்பட்ட குண்டொன்று பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து படையினரால் செயலிழக்க வைக்கப்பட்டது. அண்மைக் காலமாக மட்டக்களப்பு பகுதியில் குண்டுப் பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## பொஸ்னிய சமாதானத் திட்டத்தை

## குர்திஷ் நகர் மீது

டும்'' என பாரிஸிலுள்ள விடுதலைப் புலிகளைச் சேர்ந்த லோரன்ஸ் திலகர் பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

அதாவது இரு பகுதியினரும் பேச்சு வார்த்தைக்குத் தயார் என்றால் இதற்குத் தடையாக இருப்பதென்ன என்பதே கேள்வியாகும். இந்நிலையில்தான் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கொண்டிருக்கும் நிலைப்பாடும், விதிக்கும் நிபந்தனைகளும் முக்கியம் பெறுகின்றன.

சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் எனக் கோருகின்றது. ஆனால் இது நடைமுறைச் சாத்தியமல்ல. ஏனெனில் தமிழருடன், குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசியே தீர வேண்டும். அப்பொழுதே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணலாம் என்ற நிலையை உருவாக்கியது விடுதலைப்புலிகளிடம் உள்ள ஆயுதங்களே ஆகும். அதாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுத பலமும், அதன் மூலம் அவர்கள் சாதித்த வெற்றிகளுமே இன்று சிங்கள அரசைப் பேச்சுவார்த்தை பற்றிப் பேச வைக்கின்றது.

இந்நிலையில், ஆயுதங்ளைக் கைவிடுதல் என்பது தமிழர் உரிமை குறித்துப் பேசும் சக்தியை விடுதலைப் புலிகள் இழப்பதாகவே முடியும். இந்நிலையில் பேச்சுவார்த்தைக்கு அழைப்பவர்களைப் பலவீனப்படுத்தும் இம்முயற்சி ஏற்றுக் கொள்ளக் கூடியதோ, அன்றி நடைமுறைச் சாத்தியமானதோ அல்ல.

அடுத்ததாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு 'பயங்கரவாத இயக்கமாக' சித்திரிக்க முற்படுவதும், பிரசாரம் செய்வதுமாகும். தமிழரின் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண புலிகளை அழைக்கும் அரசாங்கம் அவர்களைப் 'பயங்கரவாத இயக்கம்' எனத் தெரிவிப்பது அரசாங்கத்தின் போலித்தனத்தைக் காட்டுவதாகவுள்ளதோடு இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டையும் காட்டுவதாகும். இந்நிலையில் பேச்சுவார்த்தை என்பது சாத்தியமாக வேண்டுமானால் அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டே ஆக வேண்டும்.

மேலும் விடுதலைப்புலிகள் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும், சமாதானத்திற்கான கதவு திறந்தே இருக்கின்றது எனவும் இப்பொழுது மட்டும் அறிவிக்கவில்லை. 1991 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து பல தடவைகள் அறிவித்துள்ளனர். அத்தோடு பேச்சுவார்த்தை குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு அன்றும் இன்றும் ஒரே மாதிரியாகவே உள்ளது. இதில் ஒன்று, நிபந்தனையற்ற பேச்சுக்கள். இரண்டு, பேச்சிற்கான சூழல். இவையே புலிகள் வற்புறுத்துபவையாகும். புலிகளின் இந்நிலைப்பாடு நியாயமானது. நடைமுறைச் சாத்தியமானதும் கூட.

இந்நிலையில் புதிய ஜனாதிபதி பேச்சிற்கான அழைப்புக்களை விடுத்தால் மட்டும் போதாது. நிபந்தனைகளைத் தளர்த்தி சமாதானப் பேச்சிற்கான சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும். உண்மையில் புதிய ஜனாதிபதிக்கு பேச்சுவார்த்தையில் விருப்பம் இருப்பின் இது கடினமான தொன்றல்ல. ஏனெனில் முன்னைய ஜனாதிபதிகள் போல் பழைய நடவடிக்கைகளுக்கு விளக்கம் கூற வேண்டிய அவசியம் இவருக்கு மிகவும் குறைவாகும். இந்நிலையில் சமாதானத்திற்காக டி. பி. விஜயதுங்கா ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்குவது கடினமானதல்ல, ஆனால், இதனை அவர் உருவாக்குவாரா?

---

கூட்டுறவுச் சங்கக் கிளைகளால் பாவனையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அளவுக்கு அதிகமாக மாறிக்கொண்டு செல்பவர்கள் உள்ளிக்கு மேலதிகமாக 20 ரூபா கொண்டு செல்லாததால் சீனியை வாங்க முடியாது திணறுகின்றனர். (சி)

## வெளிச்சேவை செய்யாத ஆசிரியர் விபரம் சேகரிப்பு

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களில் இதுவரை யாழ் மாவட்டத்துக்குவெளியேஒருபோதும் கடமையாற்றாமலுள்ள ஆசிரியர்களின் சேவை விபரங்களை 20.05.93க்கு முன்னர் தமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறுஒவ்வொரு கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

இவ் விபரத்தில் தற்போது சேவையாற்றும் பாடசாலை கல்வித்தகைமைமற்றும்சேவை விபரங்களை சரியாக உறுதிப்படுத்தி அனுப்புமாறு இவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

---

விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் உலர் உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொண்ட தனது பாவனையாளர்களிற்கு சித்திரை மாதத்திற்கான முதல் இருவார உலர் உணவு விநியோகத்தை கடந்த சனிக்கிழமையில் இருந்து மேற்கொண்டு வருகிறது. (88)

### விலை வீழ்ச்சி

தேங்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 30 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டதேங்காய் தற்பொழுது 15 ரூபாவுக்கு குறைவடைந்துள்ளது. (88)

---

(கொழும்பு)

தொலைக்கல்வி பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறும். முதாலவது தொலைக் கல்வி பரீட்சையில் 28 ஆயிரம் மாணவ ஆசிரியர்கள் தோற்றுவர் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறினார்.

வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இப்பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் முதற்பரீட்சை இதுவாகும்.

## ஜிகாத் வைத்த குண்டு செயலிழக்க செய்யப்பட்டது

மட்டக்களப்பு ஆரையம்பதி சந்தைப் பகுதியில் ஜிகாத் பிரிவினரால் கடந்த செவ்வாயன்று வைக்கப்பட்ட குண்டொன்று பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து படையினரால் செயலிழக்க வைக்கப்பட்டது. அண்மைக் காலமாக மட்டக்களப்பு பகுதியில் குண்டுப் பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

---

பொஸ்னிய சமாதானத் திட்டத்தை

# மேற்கு நாடுகள் திணித்தால் தலைநகரங்கள் தாக்கப்படும்

## சேர்பியத் தலைவர் எச்சரிக்கை

[சரஜேவோ]

பொஸ்னியாவிற்கென ஐ. நா.வினால் முன் வைக்கப்பட்ட சமாதானத் திட்டத்தை அங்குள்ள சேர்பிய இனத் தலைவர் கரோட்ரிவிச் முற்றாக நிராகரித்து விட்டார். இந்தச் சமாதான திட்டத்தை பலவந்தமாகத் திணிக்க மேற்கு நாடுகள் முற்படுமானால் லண்டனிலும், வாஷிங்டனிலும் குண்டுத் தாக்குதல் நடக்கும் என அவரது இராணுவ ஜெனரல் எச்சரித்தார்.

ஐ. நா. சமாதானத் திட்டம் பற்றி சேர்பிய மக்கள் கருத்தை அறிய கடந்த வார இறுதியில் அபிப்பிராய வாக்கெடுப்பு நடந்தது. இதன் முடிவு இன்னும் அறிவிக்கப்படாத போதிலும் பொஸ்னியாவிலுள்ள சேர்பிய மக்கள் நிச்சயமாக எதிர்த்தே வாக்களித்திருப்பர் எனக் கூறப்படுகிறது.

பொஸ்னியாவில் சேர்பிய சமூகத்திற்குச் சுதந்திரமான தனி இராச்சியம் வழங்கப்பட வேண்டும் என்பது சேர்பியரின் கோரிக்கை. பொஸ்னியாவை மூன்றாகப் பிரித்து சேர்பிய, குரோசிய, முஸ்லிம் சமூகத்திற்கு வழங்குவது என்பது ஐ. நா வின் சமாதானத் திட்டமாகும்.

## இஸ்ரேல் அமைச்சர் இந்தியா விஜயம்

[டெல் அவிவ்]

இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சரான சிமோன் பெரஸ் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லிக்கு வந்துள்ளார். இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டுமென அழைப்பு ஒன்றையும் அவர் எடுத்துக் கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இரு நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் பின்னர் அங்கிருந்து சீனாவுக்கு ஆறு நாள் உத்தியோக பூர்வமாகப் பயணம் செய்யவுள்ளார்.

## சேலத்தில் 70கோடி ரூபா ஹெரோயின் பிடிபட்டது

### ஒன்பது பேர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டின் சேலம் நகருக்கருகே சர்வதேச சந்தையில் எழுபது கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய ஹெரோயின் போதைப் பொருள் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தப் போதைப் பொருள்கள் மத்திய பிரதேச மாநிலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு எடுத்துச்செல்லப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே கண்டு பிடிக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக ஒன்பதுபேர் கைது செய்யப்பட்டதாகவும் மேலும் கூறப்படுகிறது. இவர்கள் திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடிமற்றும் இலங்கைப் பகுதிகளில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருக்கும் குழுவொன்றைச் சேர்ந்தோர் என்றும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர். தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆகக் கூடுதலான பெறுமதியுடைய போதைப்பொருள் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

### பங்களாதேஷ் புயலில் 17பேர் பலி

பங்களாதேஷில் நேற்று சில பகுதிகளில் வீசிய கடும் புயலினால் 17 பேர் பலியாகினர் 400 பேர் காயமடைந்தனர். வடபகுயில் படகு ஒன்று ஆற்றில் மூழ்கியதில் 9பேர் பலியாகினர். ஏனையோர் கிழக்கு மாவட்டத்தில் பலியாகினர். வீடுகளுக்கும் பயிர்களுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

---

## குர்திஷ் நகர் மீது ஈராக் படையெடுப்பு

(பக்தாத்)

வடக்கு ஈராக்கில் குர்திஷ் இனத்தவர்களால் தன்னிச்சையாக பிரகடனம் செய்யப்பட்ட அவீனா நகரம் மீது பல நூற்றுக் கணக்கான ஈராக்கிய துருப்புக்கள் திடீரென நுழைந்து தாக்குதல் நடத்தின. தாக்குதலுக்கு கனரக பீரங்கிகளும், மோட்டார்களும் பயன்படுத்தப்பட்டன. தொடர்ந்த ஷெல் தாக்குதலில் இரு குர்திஷ் போராளிகள் காயமடைந்தனர்.

ஐ. நாவின் பாதுகாப்பு வலயத்தையும் சூழ்ந்து ஈராக்கிய துருப்புக்கள் 10 கிலோ மீற்றர் தூரம் முன்னோக்கி வந்து தாக்குதலை நடத்தின. 200க்கும் மேற்பட்ட மக்கள் அவீனா நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர் ஈராக்கிய துருப்புகளினால் இந் நகரிலிருந்த பல வயல்களும் தானியக் கிடங்குகளும் அழிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## இஸ்ரேலின் தடையினால் புதைகுழிக்கு அலைச்சல்

(டெல்அவிவ்)

மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதியிலிருந்து பாலஸ்தீன உழைப்பாளர்கள் இஸ்ரேலினுள் நுழைய இஸ்ரேல் அரசு ஆறுவாரகாலத்தடை விதித்ததையடுத்து தலைநகர் டெல்அவிவ் இல் சடலங்களை புதைக்க புதைகுழிகள் இன்றி மக்கள் அவதியுறுகின்றனராம்.

இஸ்ரேலின் தடையினால் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த புதைகுழி வெட்டுபவர்கள் தமதுதொழிலைமேற்கொள்ள முடியாத நிலைஏற்பட்டதனாலேயே இஸ்ரேலியர் இந்த அவதி நிலைக்குள்ளாகியுள்ளனர். ''எமது பணியாளர்கள் புதைகுழிகளை தனது சொந்தக்கையினாலேயே வெட்டுவார்கள் இரவு பகல் பாராது வேலை செய்வார்கள்'' என இது தொடர்பாக பணியாளர்களை வைத்து தொழில்புரியும் அமைப்பு ஒன்றின் இஸ்ரேலிய தலைவர் தெரிவித்தார்.

பெருவின் ஷைனிங்பாத்

## அமைப்பின் 13ஆம் ஆண்டு 3 நாள் வேலை நிறுத்தம்

[லீமா]

பெருவின் இடதுசாரிபோராளிகளான ஷைனிங்பாத் என்ற அமைப்பினர் தமது அமைப்பின் 13 வருட நினைவையொட்டி நாட்டில்மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் அனுட்டிக்குமாறு அறிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து தலைநகர் லீமாவில் பெரு அரசு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

பொலிசார் குவிக்கப்பட்ட போதிலும் தலைநகரில் பரவலாக வன்முறைகள் இடம்பெற்றுவருகிறது. குண்டுவெடிப்பில் வங்கிக் கட்டடம் ஒன்று சேதமடைந்தது. பஸ் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது.

பெருவில் மீண்டும் இந்திய சமூகத்தின் இன்கா ராஜ்யம் உருவாக வேண்டும். விவசாய பொருளாதார அடிப்படையிலான அமைப்பு உருவாக்க வேண்டும் என ஷைனிங்பாத் அமைப்பினர் கோரிவருகின்றனர்.

ஈழநாதம்

# தற்கொலை தாக்குதலில் புஷ்ஷை கொல்ல சதி

## குவைத் சட்டமாஅதிபர் தகவல்

குவைத்திற்கு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வருகை தரும் போது அவரைக் கொல்ல ஈராக்கின் புலனாய்வுத்துறையினர் சதித்திட்டம் தீட்டியிருந்தமை விசாரணையிலிருந்து நிருபணமாகிவிட்டது என குவைத் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

கார் குண்டு வெடிப்பின் மூலம் கொல்ல திட்டமிடப்பட்டு பின்னர் தற்கொலை வீரனின் இடுப்பில் வெடிமருந்துகளை கட்டிக் கொண்டு தற்கொலை தாக்குதல் மூலம் புஷ்ஷை கொல்ல திட்டமிடப்பட்டது. என அவர் கூறினார். இது தொடர்பாக 11 ஈராக்கியரும் குவைத் பிரஜையும் கைதாகியுள்ளனர். விசாரணை ஜூன் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்து உண்மைகளை அறிய அமெரிக்க விசாரணையாளர்கள் குழுவொன்று குவைத் சென்றுள்ளது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9476

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-1583, 28-6996, 41-9487, 42-2397, 24-5015
26-0355, 24-6448.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9876, 27-8160, 22-3887, 26-8051, 40-2829
24-4726, 26-5882, 26-3690.

---


## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

மத்திய விளையாட்டுக்கழக அபிவிருத்திக்காக நடாத்தப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 25-5-93 அன்று பி. ப. 2.00 மணிக்கு நிலைய மைதானத்தில் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை அறியத்தருகிறோம்.


முடிவுகள் 27-5-93 "ஈழநாதம்" பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

நன்றி

சி. முரளிதரன் (தலைவர்) P. புவேந்திரகுமார் செயலாளர்

(4908)


## கண்ணீர்த்தாரைகைகளில்..



---

## 'நில்கிரி' தாமதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கென ஒரு தொகுதி மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களுடன் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்ட 'நில்கிரி' என்ற கப்பல் தாமதமாகவே வந்து சேரும் என்றுதெரியவருகிறது.

மேற்படி கப்பலில் எத்தனை பீப்பா மண்ணெண்ணெய் ஏற்றிவரப்படும் என்ற தகவலை நேற்று மாலைவரை அறிந்துகொள்ள முடியவில்லை.

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா ராணுவ முகாமிலிருந்து மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது தினமும் இரவு பகலாக பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முகாமிலிருந்து கடந்த ஒரு வாரமாக கதிரிப்பாய் சின்னக் கடற்கரை, தொண்டமனாறு, வல்வெட்டி ஆகிய குடியிருப்புகள் மீது இராணுவத்தினர் தாக்குதல்களைத் தொடுத்த வண்ணமுள்ளனர்.

## ஏற்புவலியால் மரணம்

(நெல்லியடி)

ஏற்பு வலிக்கு இலக்கான இளம் யுவதி கடந்த வெள்ளி இரவு மந்திகை மருத்துவமனையில் மரணமானார்.

சமரபாகு, வீரபத்திரர் கோவிலடியைச்சேர்ந்த செல்வி தயாளினி அண்ணாமலை (வயது 20) என்னும் யுவதியே மரணமானவராவர்.

இவரது மரணம் சம்பந்தமான விசாரணை மந்திகை வைத்தியசாலையில்நடைபெற்றது. (30)

## கரபந்தாட்ட போட்டி

பளை ஸ்ரீபதி விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட 20 கழகங்களுக்கான கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் எழுதுமட்டுவாள் ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. அகிலா வெற்றிக் கேடயத்தைத் தட்டிக்கொண்டது. (86)

---


## வேலை வாய்ப்பு

படவரைஞர் தொழிலில் முன்னனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் தகுந்த சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

(இயந்திரவியல் படவரைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

### விண்ணப்ப முடிவு திகதி:- 28-05-1993

அனுப்ப வேண்டிய முகவரி:-

விளம்பர இல. 188
மே/பா ஈழநாதம்
61, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.


---

## ஆப்கான் ஜெட் விமானம் காபூல் அருகே குண்டுவீச்சு

[காபூல்]

ஆப்கான் அரசிற்குச் சொந்தமான ஜெட் விமானங்கள் காபூலின் சுற்றுப்புறத்தில் உள்ள கிளர்ச்சியாளர்கள்நிலை மீது கடும் தாக்குதலை நடத்தின. யுத்த நிறுத்தப் பேச்சுக்களை கிளர்ச்சிஅமைப்புகள்குழப்புகின்றன என அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. குண்டுவீச்சினால் 600 க்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக ஐ. சி. ஆர். சி. வட்டாரங்கள் தெரிவித்தன.

### கடும்

காரணமாக பல வாக்குச்சாவடிகளில் வாக்குப் பதிவு மந்த நிலையில் இருந்ததாக தேர்தல் அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர். ஆயினும் முன்னாள் ஜனாதிபதி திரு. பிரேமதாசாவின் தொகுதியான மத்திய கொழும்பில் பெரும் எண்ணிக்கையான வாக்காளர் வாக்களிக்கச் சென்றனர்.

வடக்கு மத்திய மாகாணத்தில் வாக்குப் பதிவு சுமாராக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின்

மேலும் தெரிவிக்கையில் 20 மைல் நீளமான இராணுவ வேலியை அமைத்து இருக்கும் இராணுவத்தினர் அப்பகுதிகள் தமது பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாக அடிக்கடி கூறிவருகின்றனர். ஆனால் நாம் அண்மைக்காலமாக மன்னார் தீவிற்குள் சென்று நடத்திய அதிரடி தாக்குதல்கள், தள்ளாடி இராணுவமுகாமுக்கும் மன்னார் பாலத்திற்கும் இடையில் அமைந்திருந்தகடல் வழிப் பாதையில் வைத்து நடத்திய தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. பெருமளவு ஆயுதங்களையும் நாம் கைப்பற்றியுள்ளோம்

சிறிலங்கா இராணுவத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளால்மன்னார்மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள். பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இப்பகுதி மக்கள் விவசாயம் மற்றும் மீன்பிடி தொழிலையே முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். இராணுவநடவடிக்கைகளால் 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களை விட்டு மக்கள் வெளியேறியுள்ளனர். மீன்பிடித் தொழிலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் கிராமப்புற வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் சொத்துக்களை கொள்ளையடித்ததுடன் வீடுகளையும் சேதமாக்கியுள்ளனர்

மன்னார்தீவில் இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்களின் நிலைபற்றி கேட்டபோது அங்கு அடிக்கடி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து புலிகளை தேடுகிறோம், புலிகளை அழிக்கப் போகிறோம் எனக்கூறி இத்தமிழ் மக்களை கைது செய்கின்றனர். அண்மையில் கூட பேசாலை முகாமுக்குள் புகு

### உள பாதிப்புற்ற

இடம்பெறுவதால் பாதிப்புகள் இன்னும் அதிகரிக்கலாம். ஈராக் போன்ற நாடுகள் போருக்குப் பின் அமைதிக்குத் திரும்பியுள்ளன. ஆனால் இப்பகுதியில் போர் தொடர்ந்து இடம்பெறுவதால் உளவளத் தாக்கங்கள் அதிகரிக்க இடமுண்டு என்றார் அவர்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

பருத்தித்துறைப் பகுதியில் சில இடம்பெயர்ந்தோர் முகாமகளை நான் பார்வையிட்டேன். முகாம்களில் நிலைமை மிக மோசமாகவுள்ளது. குடியிருப்பு வசதிகள் திருப்திதரக்கூடியதாக இல்லை சுகாதாரம் சரியாகப் பேணப்படவில்லை. நிழலுக்குக்கூட ஒதுங்கமுடியாத வெட்ட வெளிகளில் முகாம்களை அமைத்துள்ளார்கள். இப்படியான சூழலில் வாழ்வது மிகவும் கஷ்டம். தனிப்பட்ட குடும்ப வாழ்க்கைகூடப்பாதிக்கப்பட்டுள்ளது. உலகில் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள முகாம்களில் இவ்வாறான நிலைமையில்லை.

முகாம்களையும், போரினால் பாதிக்கப்பட்ட நகரங்களையும் பார்வையிட்டுத் தரவுகளைச் சேகரித்துவருகிறேன். தொடர் நடவடிக்கையாக எதிர்வரும் ஜூலையில் மீளவும் யாழ்ப்பாணம் வரவுள்ளேன். மக்களுடன் தொடர்புடைய உள்ளூர் வாசிகளின் உதவியுடன் நான் மக்களை அணுகிவருகிறேன். கோயிலுக்குப் போதல், யோகாப்பியாசம், தியானம் போன்ற வழிகளும் மக்களுக்கு உளவளத் துணை வழங்கும் என்றார்.

உங்கள் தொடர் நடவடிக்கையின் அம்சங்கள் என்ன என்று கேட்டபோது;

எமது ஐரோப்பியஅனுபவங்கள் உங்கள்நாட்டுக்குப பயன் பொருத்தமாயிராது. மருந்து கொடுத்து வைத்தியம்பார்ப்பதன்மூலம் உளப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்கமுடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவளத் துணை அவசியம். உள்ளூரில் உளவளத் துணை ஆலோசகர்களுக்குப் பயிற்சியளிப்பது எமது திட்டங்களில் ஒன்று. எமது நிறுவனம் இப்பகுதியில் சேகரிக்கும் தரவுகளைக்கொண்டு சமூக-மனோவியல் உளவளத் துணை கைநூல் ஒன்றையும் தயாரித்து வெளியிடவுள்ளது என்றார்.

மேலும் அவர், நான் பார்வையிட்ட வடமராட்சிப் பகுதிகளில் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியர்கள்தான் காரணம் என்று சிலர் குறை கூறுகிறார்கள் ஆனால் உண்மை அது அன்று. போரின் அச்சுறுத்தல்களால் ஆசிரியர்கள் சுமுகமான சூழ்நிலையில் பாடங்களைத் தயாரித்துக் கற்பிக்க முடியாத சங்கடத்தில் உள்ளார்கள் என்றும் கூறினார்.

## கலைநிகழ்வு

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் மாதாந்த கலை நிகழ்வு நாளை புதன்கிழமை 7.00 மணிக்கு கோண்டாவில் செயலகத்திலுள்ள மாவீரர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வுகளாக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் புதிதாக தயாரிக்கப்பட்ட "ஊரெங்கும்போர்ப்பாட்டு", "கிராமத்துக் காற்று" இவற்றுடன் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளது.

---

உ

## தசாக, கிருஹயக்ஞ அழைப்பு

[10 ஆம் நாள் நினைவஞ்சலி]



25-5-93 அன்று பி.ப. 2.00 மணிக்கு நிலைய மைதானத்தில் அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதை அறியத்தருகிறோம்.

**முடிவுகள் 27-5-93 "ஈழநாதம்" பத்திரிகையில் அறிவிக்கப்படும்.**

நன்றி

சி. முரளிதரன்
(தலைவர்)

P. புவேந்திரகுமார்
செயலாளர்

(4908)

# கண்ணீர்த்தாரைகைகளில்..



## குலசிங்கம் சிவகுமார் (அமைச்சர்)

(கரவெட்டி)

[3 ஆம் வருடம் பௌதிக விஞ்ஞானபிரிவு
விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக் கழகம்]

அன்னையின் மடியில்
**10.-06-1967**

ஆண்டவன் திருவடியில்
**14-05-19৮3**

மறைந்த தோழனுக்கு எமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் பெற்றோர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

**அறிவித்தல்:-**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக சகல விஞ்ஞானபீட மாணவர்களையும் 8.30 மணியளவில் வளாகத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

—விஞ்ஞான பீடமாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(4902)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 18 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பட வரைஞர் தொழிலில் முன்னனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விரும்புவோர் தகுந்த சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

(இயந்திரவியல் படவரைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**விண்ணப்ப முடிவு திகதி:-
28-05-1993**

அனுப்ப வேண்டிய முகவரி:-

விளம்பர இல. 188
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(49ᴗ5)

# விண்ணக வாழ்வின்
# 6ஆம் மாத நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
12 07. 1933

ஆண்டவன் மடியில்
18. 12. 1992

## திருமதி செபமாலை சிசிலியா

வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவதில்லை நிலா இழந்த வானமதை எண்ணிப் பார்த்தோம். உனை இழந்த இல்லமது கண்ணில் பட்டோம். தாய்மையிலாச் சிறகொடிந்த குஞ்சுகள் போல் தவிக்கின்றோம். அரை ஆண்டாய் அம்மா! அம்மா! ஏழேழு பிறவிதான் சென்ற போதும் உன்னைப்போல் ஒரு தாயைக் காணுவோமோ சாந்தமுள உன்முகத்தின் சாயல் தானும் எம்மை என்றும் வாட்டுதம்மா மறவோம் நாங்கள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் 18-05-1993 (இன்று) செவ்வாய்க் கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியின் பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

16/3. கச்சேரி
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
பாசமிகு கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4900)

முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். இராணுவ நடவடிக்கைகளால் 5000 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களை விட்டு மக்கள் வெளியேறியுள்ளனர். மீன்பிடித் தொழிலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் கிராமப்புற வீடுகளுக்குள் புகுந்து அவர்களின் சொத்துக்களை கொள்ளையடித்ததுடன் வீடுகளையும் சேதமாக்கியுள்ளனர்

மன்னார்தீவில் இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்களின் நிலைபற்றி கேட்ட போது அங்கு அடிக்கடி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து புலிகளை தேடுகிறோம், புலிகளை அழிக்கப் போகிறோம் எனக்கூறி இத்தமிழ் மக்களை கைது செய்கின்றனர். அண்மையில் கூட பேசாலை முகாமுக்குள் புகுந்து புலிகளின் ஆதரவாளர் எனக்கூறி 6 பேரைக் கைது செய்து பூசாமுகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மக்கள் சுதந்திரமாக தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். மாலை 6 00 மணிக்கு பின்னர் மக்கள் நடமாட இராணுவம் தடை வித்துள்ளது இதனால் 24 மணி நேரமும் மக்கள் பீதியுடனேயே வாழ்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் சிறிலங்கா அரசின் பொருளாதார தடைக்கு எதிராக மடு மற்றும் தச்சனா மருதமடு அகதிமுகாம் மக்கள் பெரியளவில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர். மற்றும் அன்னைபூபதி தினம், மே தினம் ஆகியவற்றில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு தமது எழுச்சியை வெளிப்படுத்தினர் என்றார்.

மாகாணசபை

ஆணையாளர் தெரிவித்தார். மும்முனைப் போட்டி நிலவுவதால் முடிவுகள்குறித்துஎதிர்வு கூறமுடியாத நிலை உள்ளது எனவும் கூறப்படுகிறது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பு தேர்தலில் எப்படிச் செயற்பட வேண்டுமோ அவ்வாறு செயற்படவில்லை ஏழு மாகாணசபைத் தேர்தல்களிலும் கட்சிகளுக்கிடையில் போட்டி மிகவும் தீவிரமாக உள்ளது என்று ஏ. எவ். பி. செய்தியாளர் நிகால் ஜெயசிங்கா தெரிவித்தார்.

நகரின் சில பகுதிகளில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் வேலைகளில் கடுமையாக ஈடுபட்டுள்ளது. குறிப்பிட்ட இடங்களில் மொத்தமாக வாக்குகள் ஐ. தே. கட்சிக்கு விழுவது சந்தேகமே. ஆகவே வெற்றி எந்தப்பக்கம் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாத நிலையே உள்ளது என்று நிகால் ஜெயசிங்கா பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

தொடர் நடவடிக்கையாக எதிர்வரும் ஜூலையில் மீளவும் யாழ்ப்பாணம் வரவுள்ளேன். மக்களுடன் தொடர்புடைய உள்ளூர் வாசிகளின்

அன்று. போரின் அச்சுறுத்தல்களால் ஆசிரியர்கள் சுமுகமான சூழ்நிலையில் பாடங்களைத் தயாரித்துக் கற்பிக்க முடியாத சங்கடத்தில் உள்ளார்கள் என்றும் கூறினார்.

உ

# தசாக, கிருஹயக்ஞ அழைப்பு

[10 ஆம் நாள் நினைவஞ்சலி]



## சிவஸ்ரீ நீ. சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள்

சித்திரை மாதம் 26-ம் திகதி (9-05-93) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார் சிவஸ்ரீ நீ.சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

வைகாசி மாதம் 5-ம் திகதி (18.05 93) செவ்வாய்க்கிழமை தசாகம்.
,, 6·ம் திகதி (19 05.93) புதன்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
,, 7-ம் திகதி (20.05.93) வியாழக்கிழமை சபிண்டீகரணம்
,, 9-ம் திகதி (22.05.93) சனிக்கிழமை சமாராகனை

அன்னாரின் மேற்படி கிரியைகளில் குடும்ப சமேதரராய் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில்,
கோப்பாய்.

(4904)